***கவனிக்க .-*** *2015.02.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

***கவனிக்க .-*** *2010.06.28 ஆந் திகதியில் இருந்து 2013.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான மிருக வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலொன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி VI இல் ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1902 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

*1902 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 450 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 451 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம்*

**அதிகாரங்களை உரிமையாக்கும் கட்டளை**

*1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவுகள்) சட்டத்தினாலும், 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கச் சட்டத்தின் 2 (2) ஆம் உப பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களினாலும் தென் மாகாண சபையின் விவசாய, கமநல அபிவிருத்தி, நீர் பாசன, நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், வியாபாரம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெனகம உடலமத்த கமகே தயாவங்ஸ ஆரியதிலக ஆகிய நான், தென் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவி அளிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழுள்ளதும் அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழுள்ளதுமான குறிப்பிடப்பட்டுள்ள III ஆம் நிரலிலுள்ள சகல அதிகாரங்களையும் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இத்தால் அளிக்கின்றேன்.*

தெனகம உடலமத்த கமகே தயாவங்ஸ ஆரியதிலக,
விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர்விநியோக மற்றும்
வடிகால் அமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல்,
வியாபாரம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,
தென் மாகாணம்.

*காலி,*
*2014, கார்த்திகை 25.*

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கீதச்சாரிகே சுசில்* | *2013.12.30* | *கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, (44 6 நீங்கி) 45, 46, 48, 49, 50, 52, 53, 54, 58 (58 (2) அ உம் நீங்க) 59, 68 மற்றும் 72 ஆம் பிரிவின் பதிவாளருக்குரிய சகல அதிகாரங்களும், விதிகளின் கீழுள்ள அதிகாரங்கள் 4, 11. 15, 16 (ii), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49, (49 (xii) நீங்கி) 51, 52, 53 ஆம் பிரிவுகளுடைய சட்டத்தின் கீழ் பிரிவினுடைய சகல அதிகாரங்களும்.* |

*2-449/1*

---

**தென் மாகாண மாகாண சபை**

*1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம்*

**அதிகாரங்களை உரிமையாக்கும் கட்டளை**

*1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவுகள்) சட்டத்தினாலும், 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கச் சட்டத்தின் 2 (2) ஆம் உட்பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களினாலும் தென் மாகாண சபையின் விவசாய, கமநல அபிவிருத்தி, நீர் பாசன, நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெனகம உடலமத்த கமகே தயாவங்ஸ ஆரியதிலக ஆகிய நான், தென் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவி அளிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம்*

இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழுள்ளதும் அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழுள்ளதுமான குறிப்பிடப்பட்டுள்ள III ஆம் நிரலிலுள்ள சகல அதிகாரங்களையும் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இத்தால் அளிக்கின்றேன்.

தெனகம உடலமத்த கமகே தயாவங்ஸ ஆரியதிலக,
விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர்விநியோகம் மற்றும்
வடிகால் அமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல்,
வியாபாரம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,
தென் மாகாண மாகாண சபை.

காலி,
2014, கார்த்திகை 25.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கலுபஹன லியனகே சரத் சுமனசிறி | 2014.03.16 | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, (44 6) நீங்கி) 45, 46, 48, 49, 50, 52, 53, 54, 58 (58 (2) அ உம் நீங்க) 59, 68 மற்றும் 72 ஆம் பிரிவின் பதிவாளருக்குரிய சகல அதிகாரங்களும், விதிகளின் கீழுள்ள அதிகாரங்கள் 4, 11. 15, 16 (ii), 18, 19, 20, 27. 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49, (49 (xii) நீங்கி) 51, 52, 53 ஆம் பிரிவுகளுடைய சட்டத்தின் கீழ் பிரிவினுடைய சகல அதிகாரங்களும். |

2-449/2

---

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**வடமத்திய மாகாண மாகாண சபை**

வடமத்திய மாகாண அரச சேவையில் குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2014

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 1893 ஆம் இலக்கம் மற்றும் 2014.12.12 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் மாகாண சபை பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தலுக்கேற்ப விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.03.12 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

ஆர். எம். வன்னிநாயக்க,
செயலாளர்,
வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு.

2015, சனவரி 20.

2-229

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.